கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 16.11.2024 அ.வ.எண். 736/2010 பி.வா.சா.1 . மாரியம்மாள்,. க/பெ. கிருஷ்ணசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) நான் அ.வ.எண். 15/2010 சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக வாதிகள் இந்த தாவாவில் கூறியும் அதை நான் மறுத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டர் உயிரோடு இருந்த காலத்தில் கூட்டுக்குடும்பமாகத்தான் வாதிகளும் என் கணவரும் இருந்தார்கள் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டர் உயிரோடு இருந்த காலத்தில் பக்கவாதம் ஏற்பட்டு இருந்தார் என்றும் அவரை நான் மட்டும் தான் பாதுகாத்து, பராமரித்து வந்தேன் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. நாச்சிமுத்து கவுண்டர் உயிரோடு இருந்த காலத்தில் உயில் எழுதி வைத்ததாக நான் கூறியிருப்பது பொய் என்றும், அந்த உயில் எங்களால் போலியாக தயாரிக்கப்பட்டது

எ ன்றால் சரியல்ல. எனது எதிர்வாதத்தில் நானும் எனது கணவரும் சம்பாதித்த வருமானத்தில் தான் நாச்சிமுத்து கவுண்டரின் அறிவுரையின் பேரில் வாதிகள்,எனது கணவர் மற்றும் சகோதரி பெயரில் வெவ்வேறு சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) தாவா சொத்தானது எனது கணவர் மற்றும் எனது உழைப்பில் தான் மேம்படுத்தப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள்

ஒப்பம்/- ( ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

மற்றும் எனது கணவரால் தான் வழக்குச்சொத்தானது மேம்படுத்தப்பட்டது என்றும் அதை அனைவரும் பொதுவாகத்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கும் எனது கணவருக்கும் தலா 1/5 பங்கு உள்ளது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- ( ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி